31st July 1965]

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, இந்த சேதத்தை குறைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் ஏதேனும் உண்டா? அப்படியிருந்தால் அதன்பேரில் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முனைந்திருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப்பற்றித்தான் நான் முன்பேயே சொன்னேன். 230 கே.வி. லைன் போட்டால் சேதம் கொஞ்சம் குறையும். 400 கே.வி. போட்டால் இன்னும் கொஞ்சம் குறையும். 600 கே.வி. போட்டால் இன்னும் கொஞ்சம் குறையும். ஆனால், செலவும் படிப்படியாக அதிகமாகிக்கொண்டே இருக்கும்.

பட்டுக்கோட்டை கிளை உணவு உற்பத்தி அலுவலகம்

* 44 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் உள்ள கிளை உணவு உற்பத்தி அலுவலகத்தை எடுத்துவிட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு ஏதேனும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை, ஐயா.

No, Sir.

திரு. பி. முருகையன் : தலைவரவர்களே, இந்தப் பட்டுக்கோட்டையில் உள்ள கிளை உணவு உற்பத்தி அலுவலகத்தை எடுத்துவிட்டு அதை காரைக்குடிக்கு மாற்றவேண்டுமென்று புதுக்கோட்டையிலிருந்து நிர்வாக பொறியாளர் முக்கியஸ்தர்கள் ஓர் அறிக்கை அனுப்பியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இனிமேல் அப்படி வந்தால் அதைப் பட்டுக்கோட்டையிலேயே நிரந்தரமாக வைப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

MR. SPEAKER: It is a hypothetical question பின்னால் வருவதைப் பற்றி, "அப்படி வந்தால்" என்று இப்பொழுது கேள்வி கேட்டால் கனம் அமைச்சர் எப்படி பதில் சொல்லமுடியும்?

திருவரங்குளம் விவசாயப்பள்ளி

* 45 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) திருவரங்குளத்தில் உள்ள விவசாயப் பள்ளியில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்?

(இ) அப்பள்ளிக்காக பல்வேறு இனங்களின் கீழ் ஆகும் செலவுத் தொகை ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு?